திருநெல்வேலி மாவட்டத்தில் சிவில் நீதிமன்றங்கள் அமைப்பதற்கான நீதிபதி வரதராசன் கமிட்டியின் பரிந்துரைகள்.

*வினா எண் 128—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் எந்தெந்த இடங்களில் சிவில் நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்று நீதிபதி வரதராசன் கமிட்டி சிபாரிசு செய்துள்ளது?

(ஆ) எந்தெந்த இடங்களில் அமைக்கப்பட்டது?

(இ) மீதமுள்ள இடங்களில் எப்பொழுது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) திருநெல்வேலி மாவட்டம் தென்காசியில் சார்நிலை (Sub-Court) நீதிமன்றம், சங்கரன்கோயிலில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் மற்றும் வள்ளியூரில் மாவட்ட முன்சீப் மற்றும் குற்றவியல் நடுவர் நீதி மன்றம் ஆகியவைகளை அமைக்க வேண்டுமென நீதிபதி திரு. வரதராசன் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட நீதி மன்றங்களின் அதிகார வரம்புக்குழு பரிந்துரை செய்துள்ளது.

(ஆ) தென்காசியில் அமைக்கப்பட்ட சார்நிலை நீதிமன்றம் 7–9–79 ஆம் நாளிலிருந்தும், சங்கரன் கோயிலிலுள்ள மாவட்ட முன்சீப் நீதிமன்றம் 8–11–80 ஆம் நாளிலிருந்தும் செயல்பட்டு வருகின்றன.

(இ) வள்ளியூரில் உட்கோட்ட குற்றவியல் நடுவர் நீதி மன்றம் (S.D.J.M.) ஏழாம் நிதிக் குழுவின் பரிந்துரையின் பேரில் மைய அரசு அளித்த நிதி உதவியைக் கொண்டு அமைக்கப் பட்டது. அந்நீதி மன்றம் 8–11–80 ஆம் நாளிலிருந்து செயல் பட்டு வருகிறது. வள்ளியூரில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் அமைப்பது பற்றிய செயற்குறிப்பு உயர்நீதி மன்றத்துடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருகிறது.

(முற்பகல் 9-30)

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிபார்சுகள் சொல்லப்பட்டு ரொம்ப காலமாகி விட்டது. வள்ளியூரில் அமைக்கப்பட இருக்கின்ற நீதிமன்றத்திற்கு ஆபத்து உருவாகியிருக்கிறது. அதன் அடிப் படையில் அந்த ஊரில் இருக்கக் கூடிய பார் அசோசியேஷனும் அம்பாசமுத்திரத்தில் இருக்கக்கூடிய பார் அசோசியேஷனும் வள்ளியூரில் அமைக்க வேண்டுமென்று அரசாங்கத்திற்கு ஏதாவது கோரிக்கை அனுப்பப்பட்டிருக்கிறதா? அதன்மீது அரசு தக்க நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

1983 பிப்ரவரி 4]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வள்ளியூரில் உட்கோட்ட குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 8-11-80 லிருந்து அமுலில் இருந்து வருகிறது. ஆனால் மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தைப் பொறுத்த வரைக்கும், அதை அங்கே அமைக்க வேண்டுமென்ற வேண்டுகோள் உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு, அதன் பரிந்துரை எதிர் பார்க்கப்படுகிறது. அது வந்ததும், அது குறித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. செ ரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வள்ளியூரில் அமைக்கப்பட இருக்கின்ற சிவில் நீதிமன்றம் கைவிடப்பட வேண்டுமென்றும், சேரன்மாதேவியில் சிவில் நீதிமன்றத்தை அமைக்க வேண்டுமென்றும், இந்தப் பிரச்னை குழப்பத்தில் இருந்து வருகிறது. அதைப்பற்றி அரசு பரிசீலித்து, வரதராஜன் குழுவின் பரிந்துரையின் அடிப்படை யிலே, அந்த சிபார்சை முறையாக ஏற்றுக் கொண்டு, வள்ளியூரில் அமைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்மாதேவியில் ஒரு நீதிமன்றத்தை அமைக்க வேண்டுமென்ற வேண்டுகோள் வந்தது உண்மைதான். வள்ளியூரில் அதனால் பாதிப்பு ஏற்படும் என்பதும் உண்மை. எனவே, இது குறித்து உயர்நீதிமன்றத்திற்கு கருத்து தெரிவிக்கு மாறு அனுப்பியிருக்கிறோம். வரதராஜன் குழுவின் பரிந்துரை யின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது அரசின் கொள்கையாக இருக்கிறது.

திரு. ர. கிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, இராதாபுரம் தாலுகா, நான்குநேரி தாலுகா ஆகியவை திருநெல்வேலியிலிருந்து வெகுதூரத்திற்கு, 50, 60 மைல்களுக்கு மேல் இருக்கிறது. அங்கிருந்து லிடிகென்ட்ஸ் வருகிறார்கள். அந்த காரணத்தினால், வள்ளியூரில் மாவட்ட முன்சீப் கோர்ட் அமைப்பதற்கு விரிவாக பரிசீலனை செய்து, அங்கே அமைக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. இன்றைக்கு வேறு இடத்திற்கு அந்த முன்சீப் கோர்டை மாற்றுவது என்பது நியாயமல்ல. ஆகவே, ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ள பரிந் துரையை அரசு ஏற்றுக் கொண்டபோது, அந்த முன்சீப் கோர்டை அங்கு எப்போது ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உட்கோட்ட குற்றவியல் நடுவர் நீதி மன்றம் அங்கே ஏற்கனவே இருக்கிறது. மாவட்ட முன்சீப் நீதிமன்றம் அங்கே அமைக்கப்பட வேண்டுமென்ற பரிந்துரை கொள்கையளவில் சரி. உயர்நீதி மன்றத்தின் கருத்தை முறைப்

படி அறிய அங்கே அனுப்பப்பட்டிருக்கிறது. அங்கிருந்து அறிக்கை வந்தவுடன், அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போல், வரதராஜன் குழுவின் பரிந்துரையை கொள்கையளவில் அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, வரதராஜன் குழுவின் டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ் என்ன? பல நீதிமன்றங்களிலே பல மாதங்களாக நீதிபதிகள் இல்லாமல் இருப்பது சம்பந்தமாக அதில் ஏதாவது சிபார்சு செய்யப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றங்களிலே நீதிபதிகள் இல்லாமல் இருப்பது, புதிய பதவிகள் அந்தந்த வட்டங்களிலே அமைக்கப்படுகின்றபோது, இந்தப் பிரச்னை எழுகிறது. வரதராஜன் குழுவின் பரிந்துரை பல ஆண்டுகளுக்கு முன்னால் வந்தது. நீதிமன்றங்களில் நீதிபதிகள் இல்லாத பிரச்னை ஏற்கனவே இருந்தது. அப்படி 40 நீதிமன்றங்களில் தேவையிருந்தது. தற்போது 86 நீதிபதிகளை புதிதாக நியமிப்பது என்று உயர்நீதிமன்றம் முடிவெடுத்து, அதை அமுல்படுத்தி வருகிறது.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, வரதராஜன் குழு என்பது 10 ஆண்டுகளுக்கு முன்னால் நியமிக்கப்பட்ட குழு. இன்றைய தினம் நாட்டினுடைய, நகரத்தினுடைய பல்வேறு வளர்ச்சிகளை கருத்தில்கொண்டு, வேறு குழு அமைத்து இத்தகைய பிரச்னைகள் ஆராயப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டத்திற்கு ஒரு டிஸ்ட்ரிக்ட் முன்சீப்-கம்-ஜுடிசியல் மாஜிஸ்திரேட் கோர்ட் அமைக்க வேண்டுமென்று அரசு தற்போது ஆலோசித்து முடிவெடுத்துள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது நல்ல யோசனை. அதைக் கருத்தில் கொண்டு, அரசு இதுகுறித்து பரிசீலித்து, விரைவில் ஒரு முடிவெடுக்கும்.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக நீதிமன்றங்கள் துவக்கப்படுகின்றபோது, அதற்குத் தேவையான சப் ஸ்டாப், ஜுடிசியல் ஸ்டாப் நியமிக்கப்படுவதில் தாமதம் ஏற்படுகின்றது என்பது அரசுக்குத் தெரியுமா? அதை நீக்குவதற்கு அரசு விரைவில் முயற்சியை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணியாளர்களைப் பொறுத்தவரை யிலும் ஒரு குறிப்பிட்ட அளவிற்கான பணியாளர்கள் ஆரம்பக் கட்டத்தில் நியமிக்கப்படுகிறார்கள். உயர்நீதிமன்றம் கோருகிற அவ்வளவு பேரையும் நியமிப்பதற்குத் தடையாக இருப்பது நிதி தான். நிதிநிலைக்கேற்ப நடவடிக்கை அவ்வப்போது எடுக்கப் பட்டு வருகிறது.

THIRU T. VENKATA REDDY: Mr. Speaker, Sir, the new Courts are without furniture and other facilities. Most of the lawyers and all the im because of non availability of furniture. Will the Government think of providing furniture and other facilities in the Courts urgently

THE HON. THIRU C. PONNAIYAN: Hon Speaker, Sir this plight has been there for the past 35 years. This Government is taking all efforts to mitigate these difficulties.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம் பெரிய மாவட்டமாக இருக்கின்றது. ஒரே ஒரு மாவட்ட நீதிமன்றம் திருநெல்வேலியில் இருப்பதால் வழக்குகளை விரைவிலே பைசல் செய்ய முடியவில்லை. எனவே தூத்துக்குடியிலாவது அல்லது திருச்செந்தூரிலாவது மேலும் ஒரு நீதிமன்றத்தை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்திலே இருக்கின்ற இந்த தேவையை அரசு கருத்தில் கொண்டு, தூத்துக்குடியில் ஒரு மாவட்ட நீதிமன்றத்தை அமைப்பதை கருத்தில் கொண்டு பரிசீலித்து வருகிறது.

பெருந்துறை ஒன்றியத்திலுள்ள திங்களூருக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

* வினா எண் 129—திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு தொழி லாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) பெருந்துறை ஒன்றியம் திங்களூரில் குடிதண்ணீர் வழங்கப்படாதது குறித்து 6–6–1980 ல் போராட்டம் நடத்தி யதை தொடர்ந்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

(ஆ) அம் மக்களுக்கு குடிதண்ணீர் எப்போது கிடைக்கும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ) கொளப்பளூர், சிறுவளூர், குன்னத்தூர் மற்றும் ஊத்துக்குளி பஆகிய பேரூராட்சிகளின் (திங்களூர் கிராமம் உட்பட) கூட்டு